
# ஸ்ரீராம பக்த அனுமார் புராணம்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீராம பக்த அனுமார் புராணம்

## அனுமன் பிறப்பு

இராமபக்த அனுமாரை சிவ மற்றும் விஷ்ணு பக்தர்கள் அனைவரும் வழிபடுகின்றனர். இராம பக்தர்களுக்கு அனுமார் காட்சியளித்து அவர்களின் துயர்களைத் தீர்ப்பார் என்ற நம்பிக்கை இருந்து வருகிறது. அனுமார் இராமனை எப்பொழுதும் தம்முள் இருத்தி துதித்து வருபவர். இராமனின் அருளைப் பெற்ற அவரும் மற்றவர்களுக்கு அருள் வழங்கும் மகிமை பெற்றவராகத் திகழ்கிறார். எல்லா விஷ்ணு ஆலயங்களிலும் அனுமாருக்கென்று தனி சன்னதிகள் இருக்கின்றன. சிவாலயங்களில் பலவற்றிலும் அவருக்கு தனி சன்னதி அமைத்து வணங்கி வருகின்றனர். அனுமாருக் கென்று தனி ஆலயங்களும் உள்ளன.

பஞ்சபூதங்களல் ஒன்றான காற்று முதன்மையானதும் மற்றவற்றைக் காட்டிலும் வலிமை பெற்றதுமாகும். அக்காற்றுத் தேவனின் புதல்வனான அனுமானை தம்மைக் காக்கும் இரட்சகனாக மக்கள் மதித்து தொழுது வருகின்றனர். அவருக்குப் பிரியமான வெண்ணெயை சாத்தியும், வட மாலையை சூட்டியும் அவரை மகிழ்வித்து வருகின்றனர். "ஸ்ரீராமஜெயம் ஸ்ரீராமஜெயம்" என்று ஜெபித்தாலே போதும்! அனுமாரின் கருணை கிட்டிவிடும். அவரை வழிபடுபவர்கள் உடல் நலனும் உறுதியும் பெற்றவர்களாய் எல்லாத் துன்பங்களினின்றும் விடுபட்டவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாய் இருப்பார்கள். அத்தகைய மகிமை பெற்ற அனுமான் இறைவன் அவதாரமாக இல்லாவிட்டாலும் இறைவனின் அருளைப் பெற்று அதன்மூலம் தானும் வலிமைபெற்று இறைவனுக்கு ஈடாக மதிக்கப்படுகிறார்.

அவருக்கு ஆஞ்சநேயர், வாயுபுத்திரன், மகாபலிஷ்டன், மாருதி, இராமேஷ்டன், அர்ஜுனசகன், பிங்காட்சன், அமிதவிக்ரன் என்று இன்னும் பல பெயர்கள் உண்டு. அவர் திரேதா யுகத்தில் பிறந்து இன்றும் சிரஞ்சீவியாய் வாழ்ந்து வருகிறார் என்று நம்பப்படுகிறது. அவருடைய புராணம் சிறப்புப் பெற்றதாகவும் சுவை மிகுந்ததாகவும் இருக்கிறது.

திரேதா யுகத்தில் கேசரி என்ற சிவபக்தன் ஒருவன் வசித்து வந்தான். அவனுக்கு திருமணமாகி நீண்ட காலமாகியும் மக்கட்பேறு உண்டாகவில்லை. அதனால் துயருற்ற அவன் சிவபெருமானை நோக்கி தவம் புரிந்தான். அப்பொழுது கூட சிவன் அருள் புரியவில்லை. அதனால் நீர் ஆகாரம் எதுவுமின்றி காற்றையே உணவாகக் கொண்டு திடமனதுடன் நீண்டகாலம் தவம் புரிய சிவபெருமான் அவன்முன் காட்சி தந்தார்.

கேசரி தனக்கு பிள்ளைவரம் வேண்டுமென்றான். அதுவும் அந்த மகன் வலிமையும், வீரமும் பெற்று மரணமும் இல்லாதவனாக இருக்கவேண்டுமென்று கேட்டான். கேசரிக்கு பூர்வபுண்ணியமில்லாததால் இப்பிறவியில் மகன் பெறும் பாக்கியம் இல்லை என்பது சிவனாருக்குத் தெரிந்தது. அனால் அவர், "பக்தா உனக்கு மகன் பிறக்க பாக்கியமில்லை. ஒரு மகள் பிறக்க பேறு உள்ளது. அந்த மகளுக்கு ஒரு மகன் பிறப்பான். அந்த மகன் நீ கோரியபடி சிறப்புற்று திகழ்வான்" என்று கூறிவிட்டு மறைந்தார்.

அவ்வாறே அவன் மனைவிக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு அஞ்சனை என்று பெயரிட்டு சிறப்புடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்த்து வந்தான். தக்க பருவத்தில் அவள் விரும்பியவாறே வானர வீரன் ஒருவனுக்கு மணமுடித்து கொடுத்தான். அவளுக்கும் நீண்டகாலமாகியும் குழந்தைப் பாக்கியம் உண்டாகவில்லை. தன் தந்தைக்கு சிவபெருமான் கொடுத்த வரம் தவறாது என்று எண்ணினாலும், அவளால் கவலைப்படாமல் இருக்க முடியவில்லை.

அச்சமயத்தில் தருமதேவதை குறத்தி வடிவில் வந்து திருவேங்கட மலைக்கு கணவனுடன் சென்று பெருமானை வணங்கி வந்தால் ஆண்மகன் பிறப்பான் என்று கூறிச் சென்றாள். அவ்வாறே அவளும், கணவனுடன் சென்று வழிபட்டாள். பிறகு காற்றையே உணவாகக் கொண்டு இறைவனை குறித்து தவமிருந்தாள். அதனால் வாயுபகவானின் அருளினால் ஒரு கரு அவள் வயிற்றில் வளர்ந்தது.

தவமிருந்த நிலையிலேயே தான் கருவுற்றதையறிந்து வேதனையுற்றாள். அப்பொழுது அசரிரீ குரல், "வருந்தவேண் டாம். வயிற்றில் உருவாகி வளர்ந்து வரும் கரு மகேஸ்வரணின் கருணையால் தான். வாயுதேவனின் சொரூபமே உன் கருவில் இருப்பதால் வாயுபுத்திரன் என்று பெயரிடுவாய். அவன் சகல சக்திகளும் பெற்றவனாய் என்றும் சிரஞ்சீவியாய் திகழ்வான்" என்று கூறியதும் மகிழ்ச்சியுற்றாள்.

உரிய காலத்தில் ஓர் ஆண்மகனைப் பெற்றெடுத் தாள். அவனுக்கு அனுமன் என்று பெயரிட்டனர். அஞ்சனா தேவியின் மகன் என்பதால் ஆஞ்சநேயன் என்றும் வழங்கப்பட் டான். வாயுதேவனின் அருளினால் பிறந்தவனாகையால் காற்றைப்போல எல்லா திசைகளிலும் திரியும் ஆற்றல் பெற்றிருந்தான். குழந்தையிலேயே மலைச்சிகரங்களையும் தாண்டுவான். கேசரியும் தன் பேரனின் ஆற்றலையும், வேகத்தையும் கண்டு மகிழ்ந்து அவனை வாழ்த்தினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தைப் பருவத்தின் அனுமன்

ஒரு சமயம் அனுமன் பசி பொறுக்கமாட்டாமல் வீறிட்டு அழுதுகொண்டிருந்தான். அப்பொழுது வானத்தில் சூரியன் செந்நிறமாக ஒளிர்ந்துகொண்டிருந்தது. அதைக் கண்ட வாயுபுத்திரன் சிவந்த பழமென்று நினைத்து அதைப் பிடிக்க அருகில் சென்றான். அதேசமயத்தில் சூரிய கிரகணமான அன்று இராகு, சூரியனை பிடிப்பதற்காக வந்துகொண்டிருந் தான். அவன் அனுமனைப் பார்த்து திடுக்கிட்டு தேவேந்திரனி டம் முறையிட்டான். சூரியனைப் பிடிக்கவிடாமல் ஒரு குழந்தை தடுத்து நிற்கிறது. அதை நீங்கள் தான் விரட்டவேண்டும் என்று வேண்டினான்.

இந்திரன் கோபத்துடன் கையில் வஜ்ஜிராதத்தை ஏந்தியபடி சூரியமண்டலம் வந்தான். தன் ஆயுதத்தை அனுமன் மீது ஏவ அது அவனுடைய தாடையைத் தாக்கியது. அனுமன் பூமியில் விழுந்து மயக்கமுற்றான். இச்செய்தி அஞ்சனைக்கு தெரிந்து வானர வீரர்களுடன் அனுமன் இருந்த இடத்திற்கு வந்தாள். தன் மகனின் நிலையைக் கண்டு மகேஸ்வரனை வேண்டினாள்.



அச்சமயம் இந்திரன் அங்கு தோன்றி "அஞ்சனையே! கவலை வேண்டாம். அனுமன் சூரியனைப் பிடித்திருந்தால் அதன் கிரகணங் களால் தீமைகள் விளையும். அதனால் தான் தடுப்பதற்காக என் வஜ்ஜிராயுதத்தை ஏவினேன். அனுமன் சிவபெருமான் வரம் பெற்றவன். தேவர்களாகிய எங்கள் அருளும் அவனுக்கு என்றும்

இருக்கும்" என்று கூறினார். அனுமன் சிறிது நேரத்தில் விழித்தெழுந்தான். ஆனால் வஜ்ஜிராயுதம் தாடையில் தாக்கியதால் அது நீண்டு இருந்தது. பின்னர் அத்தோற்றம் மாறவில்லை. அதுவே அனுமனின் உருவத்தில் பிரத்தியேக அமைப்பாக உள்ளது.

ஒருசமயம் அனுமன் தன் தோழர்களுடன் காடுகளிலும், மலைகளிலும் விளையாடிக் கொண்டிருந்தான். அவன் பெரிய மரங்களையெல்லாம் ஒரே கையால் பிடுங்கி வீசி எறிவான். பாறைகளையும் அவ்வாறே பந்துபோல தூக்கி விளையாடிக் கொண்டிருந்தான். அவ்வாறு இருக்கும் பொழுது ஒரு பகுதியில் யாகம் செய்துகொண்டிருந்த முனிவர்கள் மீது அவன் எறிந்த மரங்களும் பாறைகளும் விழுந்தன. இதனால் அவர்களுக்கு கோபம் ஏற்பட்டது. "அனுமன், தன் வலிமையைப் பற்றி தான் உணராமல் போகட்டும்" என்று சாபமிட்டனர். இதையறிந்த அஞ்சனாதேவி முனிவர்களிடம் வந்து தன் மகனின் பிழைய பொறுக்குமாறு மன்றாடினாள். முனிவர்களுக்கும் அனுமனின் சிரஞ்சீவி தன்மையும், மகிமை உணர வந்தது. அதனால் பிறர் எடுத்துரைக்கும் போது தன் வலிமையுணர்ந்து செய்வதற்கரிய செயலைப் புரிவான் என்று அவனை வாழ்த்தினர்.

அதன்பிறகு அனுமன் முனிவ்ர்களை பெரிதும் மதித்தான். அவர்களைப் பணிந்து அவர்களிடமே வேத சாஸ்திர புராணங்களையெல்லாம் கற்றுத் தேர்ந்தான். அனுமன் உடல் பலத்துடன் அறிவும் வளரப் பெற்றான். அஞ்சனாதேவி தன் மகனை கிஷ்கிந்தைக்கு அழைத்துச் சென்று வாலியின் தம்பியான சுக்கிரீவனிடம் அழைத்துச் சென்றாள். சுக்கிரீவன் அனுமனின் அறிவாற்றலையும், செயல்திறனையும் கண்டு அவனை தன் அமைச்சனாக ஏற்றுக்கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இராமன் அன்பைப் பெற்ற அனுமன்

சுக்கிரீவனுக்கும், வாலிக்கும் பகைமூண்டதால் சுக்கிரீவன் நாட்டைவிட்டு விரட்டப்பட்டான். தன் அண்ணனை எதிர்ப்பதற்கு வலுவின்றியிருந்தான். அச்சமயத்தில் தசரதகுமாரன் இராமன் தந்தையின் வாக்குப்படி தன் மனைவி சீதை, தம்பி இலக்குவணனுடன் ஆரண்யவாசம் செய்து வந்தபோது இலங்கேஸ்வரனான இராவணன் சீதையை கவர்ந்து சென்றுவிட்டான். அதனால் வேதனையுற்ற இராமனும், இலக்குவணனும் சீதையைத் தேடி அலைந்து திரிந்துகொண்டிருந்தனர். அவர்களை சுக்கிரீவன் பார்க்க நேர்ந்தது வாலியின் ஆட்கள் தான் தன்னை எதிர்க்க வந்திருக்கிறார்களோ என்று அஞ்சி அனுமனை அவர்களைப் பற்றி அறிந்துவர அனுப்பினான்.

அனுமனுக்கு இராமனை முதன்முதலாகப் பார்க்கும் பாக்கியம் கிடைத்தது. அப்பொழுதே அவன் இராம பக்தனாக மாறிவிட்டான். இராமனுக்கும் சுக்கிரீவனுக்கும் நட்பு ஏற்பட பாலமாக அமைந்தான் அனுமன். சீதையை இராவணன் கவர்ந்து சென்றபோது அவள் தன் ஆபரணங்களைப் பூமியில் வீசியெறிந்தாள். அவற்றை வானர வீரர்கள் கண்டெடுத்து சுக்கிரீவனிடம் கொடுத்தனர். அவற்றை இராமனுக்குக் காட்ட இவை சீதையினுடையதே என்பதை அறிந்து மேலும் துயருற்றான்.

சீதையைக் கண்டு ஒப்படைக்கும் பொறுப்பை சுக்கிரீவன் ஏற்றான். இராமன் வாலியை வதம் செய்து சுக்கிரீவனை மன்னனாக்கினான். அதன்பிறகு சீதையைத் தேடி வர வானரப் படையினரை அணியாகப் பிரித்து பல திசைகளுக்கும் அனுப்பி வைத்தான் சுக்கிரீவன். அப்பொழுது இராமன் அனுமனை மட்டும் தனியே அழைத்து, "வாயுபுத்ரா! உன் திறமையில் எனக்கு நம்பிக்கை இருக்கிறது. நீ சீதையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காண நேரிடும்போது இந்த கணையாழியை அவளிடம் காட்டி, எங்கள் நிலவரத்தையும் தெரியப்படுத்து" என்று கூறி தன் கணையாழியைக் கழற்றிக் கொடுத்தான். அத்துடன் சீதைக்கும் தனக்கும் தெரிந்த சில இரகசிய நிகழ்ச்சிகளையும் அவனுக்குக் கூறினான். சீதை அனுமனைக் கண்டு அஞ்சாமல் நம்பிக்கையுடன் இருக்க வேண்டுமென்பதற்காகவே இராமன் அவ்வாறு செய்தான்.

## கடலைத் தாண்டினான்

வானரவீரர்கள் எல்லாத் திக்குகளிலும் சீதையைத் தேடி அலைந்தனர். எங்கும் கிடைக்கவில்லை. அனைவரும் மகேந்திர மலையில் வந்து கூடினர். இன்னும் எங்கு சென்று தேடுவது என்று புரியாமல் விழித்தனர். அவளைக் கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்காமல் செல்வதைவிட சடாயுவைப்போல வீரமரணம் அடையலாம் என்று வானர வீரர் களுக்கு அனுமன் கூறினான். இந்த வார்த்தையைக் கேட்டு சடாயுவின் அண்ணன் தீய்ந்து போன சிறகுடைய சம்பாதி அங்கு வந்தான். சடாயு இராவணன் சீதையைக் கவர்ந்து சென்ற சமயம் அவனைத் தடுத்துப் போரிட்டுப் பின் அவானல் வதைக்கப்பட்டான் என்ற விவரத்தை சம்பாதி அறிந்து மிகவும் வருந்தினான்.

சம்பாதி சீதை இலங்கையில் சிறை வைக்கப்பட்டிருக் கிறாள் என்ற உண்மையைக் கூறினான். அப்போதே அவனுடைய தீய்ந்துபோன சிறகுகள் மீண்டும் முளைத்தன. அவன் மேலும் உற்சாகமுற்று மகேந்திர மலையில் உச்சியிலிருந்து இலங்கை இருக்கும் நிலவரத்தையும், நூறு யோசனை தூரமுள்ள இலங்கையை இங்கிருந்து ஒரே மூச்சில் தாண்டவல்லவர்களால் தான் அடையமுடியும் என்றும் சொன்னான்.

இதைக்கேட்டு வாலியின் மைந்தனான அங்கதன் கூட அசந்துபோனான். வானரவீர்களில் யாருக்கும் அத்தகைய வலிமை இல்லை. என்ன செய்வது என்று புரியாமல் விழித்தனர். அப்போது கரடி அரசனான ஜாம்பவானும் அவர்களுடன் இருந்தான். ஜாம்பவானும் இராமன் மீது பக்தியும், சீதையைத் தேடுவதில் ஆர்வமும் கொண்டிருந் தான். அவனுக்கு அனுமன் மீது நம்பிக்கை வந்தது. சிறு குழந்தையாக இருந்தபோது வானத்திலிருந்த சூரியனையே தாவிப் பிடிக்கச் சென்ற அவனால் நிச்சயம் இலங்கையை அடைய முடியும் என்று அனுமனின் வலிமையை எடுத்துக் கூறினான்.

அப்பொழுது தான் அனுமனுக்கும் தன் வலிமை பற்றித் தெரியவந்தது. அவன் மனத்தில் உத்வேகம் பிறந்தது. "ஸ்ரீராம்ஸ்ரீராம்" என்று இராமநாமத்தை ஜெபிக்க அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேருருவம் எடுத்தான். மகேந்திர மலையின் உச்சியை அடைந்து அங்கிருந்து வாயு வேகத்தில் கடலைக் கடந்து பறந்துசென்றுகொண்டிருந்தான்.



அனுமன் வானத்தில் பறந்து செல்லும் காட்சியைக் காண தேவர்கள் வானவெளியில் வந்து கூடினர். அனுமன் இராமனின் காரியமாகச் செல்லுவதை அறிந்த கடலரசன் அவனுக்கு இடையூறு செய்யவில்லை. உதவ விரும்பி கடலுக்கடியில் இருக்கும் மைனாக மலையிடம், "இராம காரியமாக செல்லும் அனுமன் களைப்புறுவான். அதனால் அவன் களைப்பாறிச் செல்ல உதவு" என்றான். அவ்வாறே உதவ மைனாக மலை கடலுக்கடியிலிருந்து உயரக் கிளம்பியது. குறுக்கே மலை இருப்பதைக் கண்ட அனுமன் கோபத்துடன் கை முஷ்டியினால் ஓங்கி அறைய மலை கடலின் அடிக்குச் சென்றது. மலையரசன் மனித உருவுடன் அனுமனிடம் "நான் உனக்கு உதவவே வந்தேன். தங்கள் தந்தையான வாயுபகவான் இந்திரனின் கோபத்திலிருந்து என்னைக் காப்பாற்ற இந்தக் கடலினுள் வைத்திருக்கிறான். இராம காரியமாகச் செல்லும் நீ சிறிதுநேரம் என் மீது தங்கி இளைப்பாறிச் செல்ல வேண்டும் என்று வேண்டிக்கொள்ள, "இப்பொழுது நேரமில்லை. திரும்பும்போது தங்குகிறேன்" என்று கூறிவிட்டு தொடர்ந்து சென்றான்.

இதைக் கண்ட தேவர்கள் அனுமனின் வலிமையைச் சோதிக்க பாம்புகளுக்கு அன்னையான ஜுரஸை அனுப்பி வைத்தனர். ஜுஷரஸ் ஆகாயத்திற்கும் பூமிக்கும் குறுக்கே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிமறித்து நின்று, "வானரனே! உன்னை நான் விழுங்கப்போகிறேன்" என்றாள். அனுமன், உனக்காக சாகப் பயப்படவில்லை. ஆனால், நான் இராமகாரியமாக செல்வதால் தடுக்காதே. வரும்போது நானே உனக்கு இரையாகிறேன்" என்று கூறியும் கேட்காமல் தன் வாயைத் திறந்தாள். அனுமன் சட்டென்று தன் உருவைச் சிறிதாக சுருக்கிக் கொண்டு வாய் வழியாகப் புகுந்து வாயை மூடுவதற்குள் வெளியில் வந்து விட்டான். தேவர்கள் அனுமனின் திறனைக் கண்டு வியந்தனர். ஸரஸ் அனுமனைப் பணிந்து, "உன் ஆற்றலைச் சோதிக்கவே இவ்வாறு செய்தேன்! நீ வெற்றியுடன் திரும்புவாய்" என்று வாழ்த்தி அனுப்பினார்.

ஸிம்ஹிகை என்ற அரக்கி கடலிலிருந்து இலங்கைக்கு எந்தவித ஆபத்தும் வராமல் காத்து வருபவள். அவள் அனுமன் இலங்கைக்குப் போவதைக் கண்டு அவன் நிழலைப் பிடித்து கீழே இழுத்தாள். அவனை விழுங்கிவிட தன் வாயை அகலமாகத் திறந்தாள். அனுமன் இராமநாமத்தை உச்சரித்தபடி தன் உருவத்தைச் சுருக்கினான். அரக்கியின் வாயினுள் புகுந்து வயிற்றைப் பிளந்துகொண்டு வெளியேறினான். அரக்கி அலறியபடி கடலிலேயே உயிரிழந்தாள்.

## இலங்கையில் அனுமன்

அனுமன் கடலைக் கடந்து இலங்கையை அடைந்தான். இலங்கையின் அழகைக் கண்டு ரசித்துக் கொண்டிருந்த வேளையில் இலங்கையின் காவல் தெய்வமாகிய இலங்கிணி அவனைத் தடுத்தாள். ஆனால் அவன் நிற்கவில்லை. அதனால் இலங்கிணி அவனை அடிக்க கையை ஓங்கினாள். அதற்குள் அனுமன் அவள் கையைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடித்துக்கொண்டு தன் கையால் ஓங்கி அறைந்தான். அந்த வலி தாங்க முடியவில்லை. அத்துடன் பிரம்மன் கூறியது நினைவுக்கு வந்தது. அனுமனிடம், "என்றைக்கு ஒரு குரங்கு என்னை வெல்லுமோ அப்போதே இலங்கை அழிவுறும் என்று ஒருமுறை பிரம்மா கூறியிருக்கிறார். அது நடக்கப்போகிறது. தர்மம் வெல்லும். நீ சென்று வெற்றியுடன் திரும்பு" என்று காவல் தெய்வமே வாழ்த்தி அனுப்பியது.

இலங்கை அரண்மனையினுள் புகுந்தான் அனுமன். ஒவ்வொரு இடமாகச் சென்று பார்த்தான். எங்கும் சீதையைக் காணவில்லை. அப்போது இராவணனின் சயன அறைக்குச் சென்று பார்த்தான். அவனோ கம்பீரமாக படுத்திருந்தான். அவன் வாய் சீதை என்று பிதற்றிக்கொண்டிருப்பதையும் கண்டான். அடுத்து இராவணனின் மனைவி மண்டோதரி படுத்திருந்த அறைக்குச் சென்றதும் வியப்பும் அதிர்ச்சியும் கொண்டான். இவ்வளவு பேரழகு வாய்ந்தவள் சீதையாகத் தான் இருப்பாளென்று தவறாக எண்ணினான். பிறகு கூர்ந்து கவனித்தபோது திறந்திருந்த அவள் வாயிலிருந்து எச்சில் வழிந்து கன்னங்களில் காய்ந்திருப்பதைக் கண்டு, இவளும் அரக்கியாகத் தான் இருப்பாள் என்று மனந்தெளிந்தான். தான் சந்தேகப்பட்டதற்காகப் பெரிதும் வருந்தினான்.

அரண்மனை முழுவதும் தேடியும் சீதையைக் காணவில்லை. முடிவில் அசோகவனத்தில் சீதையைக் கண்டான். சீதை இராமனின் நினைவாகவே பிதற்றிக் கொண்டிருப்பதைக் கண்டு பெருமைப்பட்டான். அப்பொழுது இராவணன் வந்து சீதையின் அன்பைப் பெற பல ஆசை வார்த்தைகளைக் கூறினான். ஆனால் அவளோ அவனை இகழ்ந்துரைத்தாள். இராமனின் பெருமைகளைக் கூறி அவனிடம் தன்னை ஒப்படைத்துவிடுவதே அவனுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உகந்தவழி என்றும் எடுத்துரைத்தாள். ஆனால் இராவணன் இன்னும் இரண்டு மாதத்திற்குள் இணங்காவிட்டால் கொன்றுவிடுவதாக பயமுறுத்திவிட்டுச் சென்றான்.

அவன் சென்றபிறகு அங்கிருந்த அரக்கிகள் சீதைக்கு இராவணனை விரும்பும்படி உபதேசம் செய்தனர். அவர்களை யெல்லாம் சினந்தாள் சீதை. இக்காட்சிகளைக் கண்ட அனுமன் சீதையின் பெருமையை உணர்ந்தான். சிறிது நேரத்திற்கெல்லாம் அங்கிருந்த அரக்கிகள் உறங்கிவிட்ட னர். பிறகு அனுமன் சீதை தன்னை நம்ப வேண்டும் என்பதற்காக மரத்தின் மீதிருந்தபடியே சீதையின் காதில் விழுமாறு இராமனின் அருமை பெருமைகளைக் கூறினான். இராமனின் பிறப்பு முதல் சீதையைப் பிரிந்த வரையிலான நிகழ்ச்சிகளைக் கூறினான். அவற்றைக் கேட்க கேட்க சீதையின் முகபாவனை மாறியது. இவ்வளவு நாள் இல்லாது இப்பொழுது இவ்வாறு பேசுவது யார் என்று எண்ணிய பொழுது அனுமன் சீதையின் முன் தோன்றி இராமன் அளித்த கணையாளியைக் காட்டி நம்பிக்கை பெற செய்தான்.

ஜானகிக்கு ஆறுதலையும் விரைவில் வந்து இராமபிரான் மீட்பான் என்ற நம்பிக்கையையும் கொடுத்தான். சீதை தன்னிடமிருந்த சூடாமணியை அனுமனிடம் கொடுத்து இராமனிடம் அடையாளமாகக் காட்டும்படி கூறினாள். பிறகு அனுமன் விடைபெற்றான். அனுமன் இராவணனின் மீது இருந்த கோபத்தினால் அசோக வனத்தை அழிக்க முற்பட்டான். அதைக்கண்ட அரக்கிகள் இராவணனிடம் முறையிட்டனர். ஒரு குரங்கு இத்தனை வலிமையா என்று எண்ணினான் இராவணன். தன் படைகளை அனுப்பி குரங்கை அழைத்துவரச் செய்தான். அவர்களுடன் அனுமன் தனித்து நின்று பயங்கரமாகப் போரிட்டான். மந்திரிகளையும், சேனாதிபதிகளையும் கொன்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரக்கர்கள் பலர் உடலுறுப்புகளை இழந்து துடிதுடித்தனர். இராவணனின் இளைய மகனான அச்சக்குமாரனின் மண்டையை உடைத்துக் கொண்டான் அனுமன். அதனால் வேதனையுற்ற இராவணன் மூத்தமகன் இந்திரஜித்தை அனுப்பினான். இந்திரஜித் அவனைப் போரில் வெல்ல முடியாது என்று நினைத்து பிரம்மாஸ்திரத்தை ஏவி அவனைக் கட்டி இராவணன் அவைக்கு இழுத்துவந்தான்.

இராவணன் அரண்மனையில் தன்னை இராமன் அனுப்பிய தூதனாக அறிமுகம் செய்துகொண்டு, இராவணன் செய்த தவறுகளைச் சுட்டிக்காட்டி மனந்திருந்தி சீதையை இராமனுடன் சேர்த்துவிடுமாறு சொன்னான். ஆனால் இராவணன் அனுமன் மீது சீறி பாய்ந்தான். அவனைக் கொல்ல முற்பட்டதைக் கண்டு அவன் தம்பி விபீஷணன் தூதுவனைக் கொல்வது தருமம் அல்ல என்று தடுத்தான்.

பிறகு அனுமனைக் கொல்லாது அவன் வாலில் ஒரு துணியைச் சுற்றி நெருப்பை வைத்து துரத்திவிட்டனர். அனுமன் இலங்கை நகரின் எல்லாப் பகுதிகளிலும் திரிந்து ஒரு வீடுகூட பாக்கிவிடாமல் தீக்கு இரையாக்கினான். ஏராளமான அரக்கர்களும், பொருள்களும் நாசமாயின. ஆனால் சீதை இருந்த இடத்திற்கு மட்டும் எவ்வித சேதமும் உண்டாகவில்லை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தற்பெருமை நீங்கியது

இலங்கையை தீக்கிரையாக்கிய பின் அனுமன் கடல் நீரில் வாலை நனைத்து தீயை அணைத்தான். வரும்பொழுது தன்னை வேண்டிக்கொண்ட மைனாக மலை மீது தங்கி சற்று



இளைப்பாறிவிட்டுச் சென்றான். முடிவில் சமுத்திர கரையில் தனக்காகக் காத்திருந்த அந்ததன், ஜாம்பவான் வானரர்களுடன் அனுமன் வந்து சேர்ந்தான். அனுமன் இலங்கை சென்று திரும்பியது கண்டு மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அதனால் அனுமனுக்கு தற்பெருமை அதிகமாகியது.

அப்பொழுது அனுமன் மலைச் சாரலில் இருந்த போது சிறுநீர் கழிக்க வேண்டியிருந்தது. தன் மடியில் சீதை அளித்த




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடாமணியை வைத்துக்கொண்டு கழிக்க விரும்பாத அங்கிருந்த முனிவரிடம் சிறிது நேரம் வைத்திருக்கும்படி சொன்னான். அவர் அதைக் கையில் வாங்காமல் தன் அருகிலிருந்த கமண்டலத்தில் போட்டு வைக்குமாறு சொல்ல அவ்வாறே செய்தான்.

திரும்பி வந்து அவனே கமண்டலத்தில் தேட ஐந்து சூடாமணிகள் அவன் கையில் சிக்கின. அவன் வியப்புற்று முனிவரிடம் கேட்டான். அவர், "எனக்கு ஒன்றும் தெரியாது, உன் பொருளை நான் கண்ணால் கூட பார்க்கவில்லை. நீ தானே போட்டாய். நீயே அடையாளங்கண்டு எடுத்துக் கொள்!" என்றார்.

அனுமன் அவரை வணங்கி, "நான் இராம காரியமாக இலங்கை சென்றேன். அங்கு சிறைபட்டிருக்கும் சீதை அடையாளமாகக் கொடுத்த சூடாமணி அது" என்றான். அதைக்கேட்டு முனிவர் சிரித்தார். "நீ இலங்கைக்கு சென்றாயா? உன்னைப் போல வேறுசில குரங்குகளும் இலங்கை சென்று சூடாமணியை சீதையிடமிருந்து பெற்று வந்ததாகச் சொல்லி கொடுத்துவிட்டு போயிருக்கின்றன" என்றார். இதைக்கேட்டு



அனுமனின் தற்பெருமை நீங்கியது. தன்னுடைய பலம் ஒன்றினால் மட்டுமே இக்காரியத்தைச் செய்யவில்லை என்பதை உணர்ந்து இராம நாமத்தை உச்சரித்தபடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்களை மூடித் திறந்தான். எதிரே முனிவர் இல்லை. அவன் கையில் சூடாமணி இருந்தது.

## இலங்கையில் போர்

கவலையுடன் இருந்த இராமனிடம், அனுமன் வந்தான். இலங்கை சென்று தான் சீதையைக் கண்டதைப் பற்றி ஆதியோடந்தமாகக் கூறி அவள் அளித்த சூடாமணியை அடையாளமாகக் காட்டினான். அதைக் கண்டு இராமனும் இலக்குணனும் மகிழ்ந்தனர். இராமன் அனுமனின் திறமையைப் புகழ்ந்தான்.

அதன் பின்பு சுக்கிரீவன் தலைமையில் கூடி ஆலோசனை செய்தனர். சீதையை மீட்க இலங்கை மீது படையெடுப்பது என்று முடிவெடுத்து புறப்பட்டனர். வழியில் சேஷாசலத்தை அடைந்த பொழுது அனுமனின் தாய் அஞ்சனாதேவி இராமனையும், இலக்குவனையும் வரவேற்று சிலநாள் தன்னுடன் தங்கியிருக்கும்படி வேண்டினாள். அவ்வாறே இருந்துவிட்டு தென்திசை நோக்கி பயணமாகி கடற்கரையை அடைந்தனர்.


இக்கடலைத் தாண்டினால் தான் இலங்கையை அடைய முடியும். அதற்கான மார்க்கம் விளங்காமல் விழித்தனர். இராமன் அம்பைவிட்டு கடல் நீரை வற்றச்செய்து பின் கடலைக் கடக்கலாம் என்று நினைத்து வில்லில் அம்பைப் பூட்டினான். இதைக் கண்டதும் கடலரசன் ஓடிவந்து பணிந்து இவ்வாறு செய்யவேண்டாம் என்று சொல்ல கடலைக் கடக்கும் மார்க்கத்தைக் கூறுமாறு அவனிடமே இராமன் கேட்டான்.

கடலரசன் வானர வீரர்களில் ஒருவனான நளன் என்பவனின் கடந்தகால நிகழ்ச்சிளைக் கூறினான். ஒருசமயம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நளன் கங்கைக்கரையில் ஒரு அந்தணன் பூசித்து வந்த சாளக் கிராமத்தை எடுத்து கங்கையில் வீசி எறிந்தான். அதனால் கோபமடைந்த அவர் நளன் எந்தப் பொருளை தம் கையால் நீரின் மீது எறிந்தாலும் அது மிதக்கும் என்று சாபமிட்டார். அதனால் அவனைக் கொண்டு பாறைகளையும் கற்களையும்



கடல் நீரில் போட்டால் அது மிதக்கும். நீங்கள் எளிதாகக் கடக்கலாம் என்று கடலரசன் சொல்லிச் சென்றான். அவ்வாறே வானர வீரர்கள் பாறைகளையும் கற்களையும் பெயர்த்து வந்து நளனிடம் கொடுக்க அவன் அதன்மீது இராமநாமத்தை எழுதி நீரில் போட்டான். அதைக்கண்ட அணில் ஒன்று மணலில் புரண்டு கடலில் எறிந்த கற்களுக்கிடயே உடலில் ஒட்டியிருந்த மணலை உதறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அணை கட்டுவதில் தானும் பங்குகொண்ட திருப்தி அதற்கு. இதைக்கண்ட இராமன் அந்த அணிலைத் தடவ அதன் முதுகில் மூன்று வெள்ளைக் கோடுகள் உண்டாயின.

சேது அணையைக் கட்டி முடிந்ததும் வானரப் படைகள் கடலைக் கடந்தனர். அனுமன் இராமனையும் அந்ததன் இலக்குவணனையும் தம் தோள்களில் சுமந்து சென்றார்கள். அனைவரும் இலங்கையை அடைந்தனர். இராவணனுடன் போரிட முற்பட்டனர். போர் மும்முரமாக நடந்து வந்தது. போரில் இராவணனின் அமைச்சர்களும் கும்பகர்ணனின் பிள்ளைகளும் கொல்லப்பட்டனர். இராவணனின் மகனான அதிகாயனை இலக்குவணன் ஒரே பாணத்தால் கொன்றான். இதனால் ஆத்திரமுற்ற இராவணன் இலக்குவணனை பழிதீர்க்க போர்க்களத்திற்குச் சென்றான். அங்கு இலக்குவணனின் பக்கத்தில் தன் தம்பி விபீஷணன் இருப்பதைக் கண்டு ஆத்திரமுற்று அவன் மீது சக்தி ஆயுதத்தை விடுத்தான். விபீஷணன் மீது செலுத்திய பாணத்தை இலக்குவணன் தாங்கியதால் அவன் மயங்கி விழுந்தான்.

இதையறிந்த இராமன் கலங்கினான். அப்பொழுது ஜாம்பவான் மேலு மலைச்சாரலில் சஞ்சீவி மலைக் குன்றில் இருக்கும் மூலிகைகளைக் கொண்டு வந்தால் இலக்குவணன் பிழைப்பான் என்று கூறினான். மேரு மலைக்குச் சென்று விரைவில் திரும்பக்கூடியவர் யார் என்ற கேள்வி எழுந்தபொழுது அனுமன் ஒருவனே வல்லவன் என்று ஜாம்பவான் கூறி அனுப்பிவைத்தான்.

அனுமனின் முயற்சியைத் தடுப்பதற்கு இராவணன் காலநேமி என்ற அரக்கனை அனுப்பிவைத்தான். அனுமன் மேரு மலை அடைவதற்கு முன்னமேயே காலநேமி முனிவர் வேடம் தாங்கி வழியில் இருந்தான். அவன் அனுமனிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் தெரிந்தவன் போல இப்பொழுது இலக்குவணன் குணமடைந்து விட்டான். அதனால் பதற வேண்டாம், இந்த ஆசிரமத்தில் தங்கி நாளை செல் என்றான்.

தவ முனிவனான அவனை நம்பி ஒப்புக்கொண்டாலும், மேருமலை அடைவதற்கான மார்க்கத்தைக் கேட்டான். அருகிலிருந்த ஒரு தடாகத்தக் காட்டி நீராடிவிட்டு வருமாறு அனுப்பினான் முனிவன். அவ்வாறே அனுமன் நீராடும் போது நீரிலிருந்த முதலை ஒன்று அவனை விழுங்கியது. அனுமன் தன் உடலைப் பெரிதாக்கிக் கொண்டதால் முதலை இரண்டாகப் பிளந்தது. முதலை ஒரு தேவ மங்கையாக மாறியது. அவள் முனிவர் அளித்த சாபத்தால் இந்த உருவம் பெற்றதாகவும், அனுமனால் சாப விமோசனம் நீங்கியதாகவும் கூறியதோடு முனிவர் வேடத்தில் இருப்பது யார் என்ற உண்மையையும் தெரிவித்துவிட்டுச் சென்றாள்.

அனுமன் காலநேமியை அடித்துக் கொண்டுவிட்டு மேரு மலையில் மூலிகைகளைத் தேடினான். அவனால் விரைவில் கண்டுபிடிக்க முடியவில்லை, அதனால் சஞ்சீவி மலையை பெயர்த்து ஒரு கையால் தூக்கியபடி இலங்கை அடைந்தான். மூலிகையின் காற்று பட்ட உடனேயே இலக்குவணன் மயக்கம் தெளிந்து எழுந்தான். அதுவரை போரில் கொல்லப் பட்டிருந்த வானர, வீரர்களும் உயிர்பெற்று எழுந்தனர். அதன் பிறகு அனுமன் சஞ்சீவி மலையை கொண்டுவந்த





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்திலேயே வைத்துவிட்டு திரும்பினான். இராமன் அனுமனை பலவாறு புகழ்ந்தான்.

பிறகு தொடர்ந்து போர் நடந்துகொண்டிருந்தது. இராவணனின் தம்பி கும்பகர்ணனும் போர்க்களத்தில் மாண்டான். அவனைத் தொடர்ந்து பலர் மாண்டனர். இந்திரஜித் பிரம்மாஸ்திரத்தை பிரயோகித்ததில் வானர வீரர்கள் மயக்கமுற்றனர். ஆனால் இராமன் நாராயணாஸ் திரத்தை விடுத்து மயக்கத்தை தெளியவைத்தான். உடனே இந்திரஜித் மேலும் பலம் பெற யாகம் ஒன்று செய்ய எண்ணி நிகும்பலை என்ற இடத்திற்குச் சென்றான். இதையறிந்த விபீஷணன் அவன் யாகம் முடிந்தால் சகல வல்லமையும் பெற்றுவிடுவான்; பிறகு வெல்லமுடியாது என்று இராமனுக்குத் தெரிவித்துவிட்டு அவன் யாகத்தைக் கெடுக்க இலக்குவணனை அனுப்பச் சொன்னான்.

இலக்குவணனுடன் அனுமனும், விபீஷணனும் கூட சென்று யாகசாலையைக் காத்துவந்த அரக்கர்களுடன் போரிட்டு அழித்தனர். யாகசாலையின் நடுவிலிருந்து ஒரு ரதம் வெளிக்கிளம்பியது. அந்த ரதத்தின் மேல் விமானத்தை அனுமன் பாய்ந்து சென்று தூளாக்கினான். இந்திரஜித் இலக்குவணன் மீது அம்புகளை சரமாரியாய் விட்டான். அப்பொழுது அனுமன் இலக்குவணனை தோள் மீது தூக்கிக்கொண்டு உயர சென்றான். இந்திரஜித்தும் வானத்தில் பறந்து இலக்குவணனை எதிர்த்தான். முடிவில் இலக்குவணனால் இந்திரஜித் மாண்டான்.

இந்திரஜித் இறந்ததும் இராவணனின் கோபம் எல்லையை மீறியது. பழிக்குப்பழி வாங்க வேண்டும் என்று வெறியுடன் போர்க்களம் பூண்டான்; இராமனிடம் நேருக்கு நேர் போரிட்டு முடிவில் நிராயுதபாணியாக நின்றான். அவனுடன் மேலும் போரிடுவது தர்மமல்ல என்பதால் "இன்று போய் நாளை வா" என்று இராமன் கூறி அனுப்பினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவமானம் தாங்காத இராவணன் மறுநாள் போருக்குச் செல்வதைப் பற்றி யோசித்தான். அப்பொழுது பாதாள லோகத்தில் இருக்கும் அஹிராவணன், மஹிராவணன் என்ற நண்பர்களின் நினைவுவர அவர்களை அழைத்தான். அவர்கள் அன்றிரவே இராம இல்குமணர்களைத் தூக்கிச் சென்று பாதாள லோக அரண்மனையில் இருக்கும் காளி தேவிக்கு அவர்களைப் பலிகொடுத்து விடுவதால் இராவணனிடம் உறுதியாகக் கூறினர்.

இச்செய்தி விபீஷணனுக்கு தெரிந்து அனுமனிடம் இருவரையும் பாதுகாக்கும்படி கூறினான். அனுமன் இராம இலக்குவணன் படுத்துறங்கும் இடத்தைச் சுற்றிலும் தன் வாலால் ஒரு கோட்டையைக் கட்டி யாரும் நுழையாதவாறு காவல் புரியத் தீர்மானித்தான். இதையறிந்த மாயாவிகள் இரவுக்கு முன்னேயே வந்தனர். அப்போது இராமனும், இலக்குவணனும் ஒரு கற்பாறையின் மீது உறங்கிக் கொண்டிருந்தனர். இதுதான் சமயம் என்று அந்த மாயாவிகள் பாறையோடு பாதாள லோகத்திற்கு கொண்டு சென்றனர்.

அனுமன் திடுக்கிட்டான். அவர்களை இலங்கையில் பல இடங்களிலும் தேடினான். கிடைக்கவில்லை. நிகும்பலைக்குச் சென்று அங்கும் தேடினான். கிடைக்கவில்லை. அப்பொழுது அங்கு ஒரு மரத்தின் மீது ஜோடி புறாக்கள் பாதாள லோகத்தில் மாயாவிகள் நாளை காலை இராம இலக்குவணனை பலி கொடுக்கப்போவதைப் பற்றி பேசின. அனுமன் கேட்டு வாயு வேகத்தில் பாதாள லோகத்திற்குச் சென்றான்.

**அனுமன் மகன்**


மஹிராவணன் அரண்மனை வாயிலில் ஒரு வானர வீரன் காவல் இருந்தான். அவன் தன்னை அனுமனின் மகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறியதைக் கேட்டு அதிசயித்தான் அனுமன். வானரவீரன் இலங்கையைத் தீக்கிரையாக்கிவிட்டு வந்த அனுமன் கடல் நீரில் தீயை அணைத்துக்கொண்டு பின் கழுத்தில் வழிந்த வியர்வையை வழித்து நீரில் சுண்டும் பொழுது அதை ஒரு மீன் விழுங்கியதும் அந்த மீனுக்குப் பிறந்தவன்தான் நான். என்பெயர் மகரத்வஜன் என்று அவன் கூற அனுமன் தன்னை யார் என்று தெரிவித்தான்.


தந்தையும் மகனும் சிறைப்பட்டவர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர். அனுமன் காளி தேவியின் கோயிலுக்குள்ளே மறைந்திருந்தான். மறுநாள் மாயாவிகள் காளியை வணங்கி பலி கொடுக்க முயற்சித்தனர். அப்பொழுது அனுமன் குரலை மாற்றி, "நீங்கள் பலி கொடுக்கவிருக்கும் இவர்கள் வீரர்களா அல்லது கோழைகளா என்பது நான் தெரிந்துகொள்ள வேண்டும். நான் வீரர்களை மட்டுமே பலியாக ஏற்றுக்கொள்வேன். அதனால் இவர்களை நீராட்டி கையில் வில்லும் அம்பும் கொடுத்து இங்கே அழைத்து வாருங்கள்" என்று கூற அவர்களும் அவ்வாறே செய்தனர்.



அனுமன் இராம இலக்குவணர்களை தன் தோளின் மீது சுமந்து கொண்டு புறப்பட்டான். அதைக் கண்ட மாயாவிகள் கோபம் கொண்டு தடுத்தனர். இராம இலக்குவணர்கள் அம்புகளால் இருவரின் தலைகளையும் துண்டித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தனர். ஆனால் அவர்களின் தலைகள் மீண்டும் உடலோடு பொருந்திக் கொண்டன. இதைக் கண்டதும் அனுமன் மாயாவிகளின் உயிர்நிலை வேறு எங்கோ இருக்கிறது என்று எண்ணி இராம இலக்குவனனை போரிடு மாறு சொல்லிவிட்டு அங்கிருந்து விரைந்தான். தன் மகன் மகரத்வஜனைத் தேடிச் செல்லும்போது வழியில் ஒரு பெண் அழுதுகொண்டிருப்பதைக் கண்டான்.

அப்பெண் நாகக்கன்னிகை தான் இராமனையே மணந்துகொள்ள விரும்பியிருந்ததாகவும் ஆனால் இந்த மாயாவிகள் தூக்கிவந்து வைத்திருப்பதாகவும் கூறினாள். அனுமன் அவர்களைக் கொல்வதற்கு வழிபுரியாமல் இருப்பதாகச் சொல்ல அவர்களின் உயிர்நிலை இருக்குமிடம் தனக்கு தெரியும் என்றாள். அத்துடன் தன்னை இராமர் மணந்துகொள்வதாக இருந்தால் மட்டுமே அதைச் சொல்ல முடியும் என்ற நிபந்தனை விதித்தாள்.

இராமனைப் பற்றி அனைத்தும் தெரிந்தவனாக இருந்தும் அனுமன் "தாயே! உன் எண்ணப்படி நடக்கும். ஆனால் இராமனின் கனத்தை உனது மஞ்சம் தாங்கும் என்றால் உன் விருப்பம் நிறைவேறும். இரகசியத்தைச் சொல்!" என்றான். அவள் நந்தவனத்தில் இருக்கும் வண்டுகளிடம் தான் அவர்களின் உயிர்நிலை இருப்பதாகக் கூற அனுமன் நந்தவனம் சென்று அங்கிருந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டுகளையெல்லாம் நசுக்கிக் கொன்றான். அதற்குள் போரிட்டுக்கொண்டிருந்த மாயாவிகள் மாண்டுவிட்டனர்.

அனுமன் கடைசியாக இருந்த ஒரு வண்டைக் கொல்லும் போது அது, "என்னை விட்டுவிடு. உங்களுக்கு வேண்டிய உதவி செய்கிறேன்" என்று கெஞ்சியது. அனுமனும், "நாகக் கன்னிகையின் மஞ்சத்தை நீ குடைந்துவிட வேண்டும். அதன் மீது உட்கார்ந்ததும் அது முறிந்து விழவேண்டும்" என்று சொன்னதும் வண்டு ஒப்புக்கொண்டது.

மாயாவிகள் இறந்ததும் மகரத்வஜனை பாதாள லோகத்திற்கு மன்னனாக முடிசூட்டிவிட்டுத் திரும்பும் போது அனுமன் இராமனிடம் நாகக்கன்னிகைக்கு தான் கொடுத்த வாக்குறுதியைப் பற்றி தெரிவித்து, இராமனை நாகக்கன்னியிடம் அழைத்துச்சென்றான். நாகக்கன்னிகை ஆவலோடு இராமனை வரவேற்று மஞ்சத்தில் அமரச்செய்தாள். உடனே மஞ்சம் முறிந்து விழுந்தது. நாகக்கன்னிகையின் விருப்பம் நிறைவேறாமல் போய்விட்டது. அனுமனின் அறிவாற்றலாலும், திறனாலும், மாயாவிகள் அழிந்ததோடு இராம இலக்குவணர்கள் காப்பாற்றப்பட்டனர். இந்நிகழ்ச்சியின் வாயிலாக அனுமனின் பெருமையை உலகறிய காட்டினான் இராமன்.

## சீதையை மீட்டனர்

மாயாவிகள் இராம இலக்குவணர்களை அழித்துவிடுவார்கள் என்று நம்பியிருந்த இராவணனுக்கு ஏமாற்றத்துடன் அதிர்ச்சியும் ஏற்பட்டது. மறுநாள் மூல பலம் என்ற தன் சேனையுடன் போர்க்களத்துக்கு வந்தான். இராவணனிடம் இருந்த தனிச் சிறப்பு வாய்ந்த படை இது ஒன்றே. இப்படையினர் மாயவித்தைகள் புரிவதில் வல்லவர்கள். இதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விபீஷணன் மூலம் அறிந்த இராமன் மோகனாஸ்திரத்தைப் பிரயோகித்தார். அந்த அஸ்திரத்தினால் திரிப்படை வீரர்கள் ஒவ்வொருவரும் இராமனைப் போன்று தோன்றவே ஒருவரை மற்றவர் கொன்று அழிந்தனர்.

இராவணன் மாயையால் சீதையைத் தோற்றுவித்து போர்க்களத்தில் கொண்டு வந்து நிறுத்தி அவளது கழுத்தை வெட்டியெறிந்தான். அதைக் கண்டு வானர வீரர்கள் மயக்கமுற்றனர். அனுமன் மாயை என்பதை உணர்ந்து மற்றவர்களின் மயக்கத்தைத் தீர்த்து போரில் ஈடுபடச் செய்தான். நாராயணாஸ்திரத்தை இராமன் விட இராவண னின் மாயைகள் யாவும் ஒழிந் தன.

இராமனுக்கும் இராவணனுக்கும் கடுமையான போர் நிகழ்ந்தது. இராமனின் இரதக் கொடியை அறுத்தெறிந்தான் இராவணன். கொடியின்றி போர் செய்வது நல்லதல்ல என்பதால் அனுமான் இராமனின் அனுமதியுடன் ஒரு பனைமரத்தையே பெயர்த்து கொடியாக நிறுத்தினான். ஒருவழியாக இராவணன் வதை செய்யப்பட்டதும் விபீஷண னுக்கு முடிசூட்டிவிட்டு சீதையையும் மீட்டுக்கொண்டு இலங்கையை விட்டுப் புறப்பட்டனர்.

### இராம பட்டாபிஷேகம்

அனைவரும் சேதுக்கரையை அடைந்தனர். இராவணன் வம்சத்தினர் பிரம்மகுலத்தில் பிறந்தவர்கள். அவர்களைப் போரில் கொன்றதால் தமக்கு பிரம்மஹத்தி தோஷம் ஏற்படக்கூடாது என்பதற்காக சிவனை வழிபட விரும்பினான் இராமன். அனுமனை காசியில் விஸ்வனாதரின் அருளுடன் சிவலிங்கம் ஒன்று பெற்றுவர அனுப்பினார். அனுமான் சென்று நீண்ட நேரமாகியும் வராது போகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீதையைக் கொண்டு மணலால் லிங்கம் ஒன்றைச் செய்து அதையே மலர்களைக் கொண்டு பூஜித்தான்.

லிங்கத்தோடு வந்த அனுமனுக்கு ஏமாற்றமாகிவிட்டது. மணலால் லிங்கம் பிடித்து வழிபட முடியும் என்றால் தன்னை எதற்காக காசிக்கு அனுப்பவேண்டும் என்று வருத்தத்துடன் கேட்டான். அனுமனின் கோபத்தைக் கண்ட இராமன் "இந்த மணல் லிங்கத்தை நீயே தூக்கி எறிந்துவிடு. நீ கொண்டு வந்த லிங்கத்தையே பிரதிஷ்டை செய்துவிடுகிறேன்" என்று கூற அனுமன் மணல் லிங்கத்தை தள்ளினான். எவ்வளவு முயன்றும் முடியவில்லை. கடைசியில் தன் வாலைச் சுற்றி லிங்கத்தை இழுக்க வால் அறுபட்டு அனுமன் கீழே விழுந்தான். வான வீரர்கள் சிரித்தனர்.

அனுமன் அவமானம் அடைந்தான். தான் இராமன் மீது கோபம் கொண்டது எத்தனை பெரிய தவறு என்பதை உணர்ந்து மன்னிப்புக் கேட்டான். இராமன் அனுமன் கொண்டுவந்த லிங்கத்தை வடக்கே நிறுவினார். "நீ கொண்டுவந்த லிங்கத்தை வணங்கிய பின்பே நான் பூஜை செய்த லிங்கத்தை வணங்குவர். அவர்களுக்கே நற்பயன் ஏற்படும்" என்று அருளினான். பின்பு இராமனின் கருணையால் அனுமனின் வால் வளர்ந்தது. அதே இடத்தில் அகஸ்திய முனிவரும் ஒரு லிங்கத்தை நிறுவினார்.

இராமனுக்கு ஆரண்யவாசம் பதினான்கு ஆண்டுகள் முடிந்துவிட்டது. அப்போது சித்திரகூடப் பர்வதத்தில் பரத்துவாஜ முனிவரின் ஆஸ்ரமத்தில் இருந்தனர். குறிப்பிட்ட நாளில் போய் சேரவில்லையென்றால் பரதன் தீக்குளித்து விடுவான் என்பது அனைவருக்கும் தெரியும். அதனால் இராமன் அனுமனை நந்தி கிராமத்திற்குச் சென்று பரதனிடம் தன் வருகையைக் கூறுமாறு அனுப்பினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரதன் இன்னும் இராமன் வரவில்லை என்பதால் அக்கினி குண்டத்தை வலம் வந்து தீயில் விழ இருந்த சமயத்தில் அனுமன் வாயு வேகத்தில் வந்து தடுத்தான். தான் இராமதூதன் என்றும் இராமனும் மற்றவர்களும் அயோத்திக்கு வந்து கொண்டிருக்கிறார்கள் என்றும் சொன்னான். பரதன் அனுமனைப் புகழ்ந்து இறுகத் தழுவி ஆனந்தக் கண்ணீர் பெருகினான்.

இராமன் அயோத்திக்கு வந்து சேர்ந்ததும் அனைவரும் ஆனந்தமடைந்தனர். இராமனும் அவர்களைக் கண்டு மெய்மறந்தான். இராமனுக்கு பட்டாபிஷேகம் நடைபெற்றது. தேவர்கள், கந்தர்வர்கள், தவமுனிவர்கள், வானரவீரர்கள், நகர மக்கள் அனைவரும் அக்காட்சியைக் காண கூடினர். இராமன் தனக்கு பேருதவியாக இருந்தவர்களை எல்லாம் கௌரவித்தார். ஜாம்பவான், சுக்கிரீவன், அங்கதன், விபீஷணன் போன்றவருக்கு வெகுமானங்களை அளித்தான். அனுமனைப் பார்த்து சிரித்தபடி தான் அணிந்திருந்த முத்து மாலையச் சீதையிடம் கொடுத்து அனுமனுக்குக் கொடுக்கச் செய்தான்.

அனுமன் அம்மாலையை வாங்கி கண்களில் ஒற்றிக் கொண்டான். அனுமனை தன்னை ஆலிங்கனம் செய்து கொள்ள செய்தான் இராமன். அனுமன் பெருமகிழ்ச்சியுடன் இராமனை ஆலிங்கனம் செய்தான். யாருக்குமே கிடைக்காத பாக்கியத்தைப் பெற்றான் அனுமன். அத்துடன் இராமன் அனுமனைத் தன்னுடன் சேர்ந்து உணவருந்த செய்தான். இவ்வாறு அனுமனுக்கு தனி கௌரவத்தை அளித்தான் இராமன். முடிசூட்டு விழா முடிந்ததும் வந்தவர்கள் விடைபெற்றனர். அனுமனும் இராமனிடம் விடைபெற்றுக் கொண்டு இமயமலைச் சாரலை அடைந்து இராம நாமத்தை ஜெபித்துக் கொண்டிருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலகுவசன்

அயோத்தி மன்னனாக இராமன் ஆட்சி புரிந்துவந்த போது சலவைத் தொழிலாளி ஒருவனின் மனைவி கோபத்தில் தெரிந்தவர் வீட்டில் ஒருநாள் தங்கிவிட்டு வந்தாள். அவளை ஏற்க அவன் மறுத்ததோடு இராமன் அந்நியன் நாட்டில் இருந்த மனைவியை ஏற்றுக் கொண்டதைப் பற்றி இழிவாகப் பேசினான். இதைச் செவியுற்ற இராமன் வேதனை தாங்காது கருவுற்றிருந்த சீதையை வால்மீகி ஆஸ்ரமத்தில் விட்டுவிட்டு வரும்படி இல்க்குவணனிடம் சொல்ல அவனும் அவ்வாறே செய்தான்.

சீதைக்கு ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அவனுக்கு இலவன் என்று பெயரிட்டனர். ஒரு சமயம் சீதை நீராடுவதற்கு நதிக்குச் செல்லும்போது முனிவரை தொட்டிலில் உறங்கும் குழந்தையைப் பார்த்துக்கொள்ளுமாறு சொன்னாள். முனிவரும் சம்மதித்தார். அவர் வேறு வேலையாக இருந்தபோது சீதை முனிவருக்கு சிரமம் எதற்கு என்று தொட்டிலிலிருந்த குழந்தையை அவளே தன்னுடன் எடுத்துச் சென்றாள். இதை முனிவர் கவனிக்கவில்லை. பின் சிறிது நேரம் கழித்து குழந்தையைப் பார்த்தார். தொட்டிலில் இல்லாதது கண்டு தேடினார். கிடைக்காது போகவே குழந்தை இல்லையென்றால் சீதை வேதனையுறுவாளே என்று அஞ்சி தர்ப்பையைக் கிள்ளி தொட்டிலில் போட்டார். அது அவர் தவ வலிமையால் குழந்தையாகியது. சிறிது நேரத்தில் சீதை குழந்தையுடன் வந்தாள். பின்தான் விஷயம் தெரியவந்தது. அதிலிருந்து இலவனும் குசனும் உடன்பிறப்புக்களாய் வளர்ந்து வந்தனர்.

## அனுமனின் தீரச் செயல்கள்

இராமர் அசுவமேத யாகத்தைச் செய்ய விரும்பினார். மனைவி இல்லாமல் செய்யமுடியாது. அப்போது வசிஷ்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற முனிவர்கள் வனத்தில் விட்ட சீதையை மீண்டும் அழைத்துவருவது முடியாது. அதனால் தங்கத்தால் சீதை உருமம் செய்து யாகத்தை நடத்தலாம் என்ற யோசனையைக் கூறினர். அவ்வாறே யாகத்தைத் தொடங்கினான்.

யாகம் முடிந்ததும் அசுவமேதக் குதிரை அவிழ்த்து விடப்பட்டது. அதற்கு பாதுகாப்பாக சத்துருக்கனன், சுமதி. புஷ்பகரன் போன்றோர் படையுடன் பின்தொடர்ந்து சென்றனர். அப்போது இராமன் அனுமனும் சென்றால் நன்றாக இருக்குமே என்று நினைத்தான். இமயமலைச் சாரலில் தவம்புரிந்து கொண்டிருந்த அனுமனுக்கு இது தெரிந்து அயோத்திக்கு வந்தான். குதிரையின் பின் அவனும் சென்றுகொண்டிருந்தான்.

ஒரு நதியில் இறங்கி கடக்கும் போது குதிரை மாயமாய் மறைந்துவிட்டது கண்டு அனைவரும் திடுக்கிட்டனர். மடுவினுள் சென்றனர். அங்கு ஒரு பெரிய மாளிகை காணப்பட்டது. அதன் தலைவி தவக்கோலத்துடன் இருந்தாள். அவளை வணங்கி தம் குதிரையைப் பற்றிக் கேட்டனர். அவளுக்கு கோபம் ஏற்பட்டது. ஆண்கள் யாரும் வரமுடியாத இடத்திற்கு வந்த அவர்கள் யார் என்று கேட்டாள். அவர்கள் தாம் வந்த வேலையைக் கூறினர்.

அதைக் கேட்டு அவள், "வீரமணி என்ற வீரன் குதிரையைக் கட்டி வைத்திருக்கிறான், அவனை வெல்வது கடினம், இருந்தாலும் இராமநாமத்தால் வெல்லலாம்." என்று கூறி அனுப்பினாள். சிவபக்தனான வீரமணியின் மகன் ருக்மாங்கதன் குதிரையைப் பிடித்து கட்டிப்போட்டிருந்தான். குதிரையை விடுமாறு கேட்டனர். மறுக்கவே சண்டை மூண்டது. அனுமன் இராம மந்திரத்தால் வீரமணியைத் தாக்கினான். அவனோ சிவனை வணங்க, சிவபெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரபத்திரருடன் போருக்கு வந்துவிட்டார். சத்துருக்கனன் புஷ்கான இருவரும் மயக்கமுற்றனர்.

அனுமன் இராமநாமத்தையே உச்சரித்துக்கொண்டு மகாதேவனைத் துதித்தான். அவனுடைய இராம பக்தியைக் கண்டு மெய்மறந்த சிவன் "ஆஞ்சனேயா! உனக்கு வேண்டிய



வரம் என்ன?" என்றார். "நான் சஞ்சீவி மலையைக் கொண்டு வரும் வரை நீங்கள் இங்கேயே இருக்க வேண்டும்" என்று சொல்லிவிட்டு மூலிகையைக் கொண்டுவரச் சென்றான். சிறிது நேரத்திற்கெல்லாம் மலையைக் கொண்டு வந்தான். அதைக் கண்டு சிவபெருமான் சிரித்தார். அப்பொழுதுதான் புரிந்தது இராமனுக்கு. இராம மந்திரம் இருக்கும் போது சஞ்சீவி மலை எதற்கு என்று. பிறகு இருவரையும் மயக்கம் தெளிய வைத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கு இராமன் காட்சி தந்தான். அவனை வீரமணியும் தரிசனம் செய்தான். குதிரையை இராமனிடமே ஒப்படைத்தான். பிறகு அனுமன் சஞ்சீவி மலையை இருந்த இடத்தில் வைத்துவிட்டுத் திரும்பினான். பின் அனைவரும் குதிரையைப் பின்தொடர்ந்து சென்றனர். நீல மலையிலுள்ள சக்கராங்கன் என்ற நகரத்தை சுபாகு என்பவன் ஆண்டு வந்தான். அவன் மகன் தமனன். அவன் குதிரையைப் பிடித்துக் கட்டிப்போட்டான். அதனால் சண்டை ஏற்பட்டது. அனுமன் மீது ஏராளமான பாணங்களைத் தொடுத்தனர். "இராமா! இராமா!" என்ற திருநாமத்தைக் கூறியே தாங்கிக் கொண்டதோடு சுபாகுவின் மார்பில் எட்டி உதைத்தான். அப்பொழுதுதான் இது இராமனின் அஸ்வமேதக் குதிரை என்பது அவனுக்குத் தெரிந்தது. அவன் மனக்கண்ணில் இராமன் காட்சி தந்தான். உடனே சண்டையை நிறுத்திவிட்டு "ஆஞ்சநேயரின் திருப்பாதங்கள் பட்டதும் எனக்கு இராம தரிசனம் கிடைத்தது. நீங்கள் குதிரையுடன் செல்லலாம்" என்று கூறினான். ஆஞ்சநேயரை ஆலிங்கனம் செய்து பெருமை கொண்டான்.

குதிரை குண்டல நகரத்தைக் கடந்த போது சுரதன் பிடித்துக் கட்டினான். அவன் இராமபக்தன் என்பதைத் தெரியாத அனுமன் அவனுடன் சண்டையிட்டு பணிய வைத்தான். அதன் பிறகுதான் இராமபக்தன் என்பது தெரிந்தது. அனுமனிடம் மன்னிப்புக் கேட்டான் சுரதன். பிறகு குதிரையைப் போகவிட்டான். வால்மீகியின் ஆஸ்ரமத்தருகில் குதிரை வந்தபோது இலவகுசர்கள் அதைப் பிடித்து ஒரு மரத்தில் கட்டிப் போட்டனர். சத்துருக்கனும் அனுமனும் கேட்டும் அவிழ்த்துவிடவில்லை.

சத்துருக்கனன் இது இராமருடைய குதிரை என்று கூறியும், அவர்கள் இராமன் தன் மனைவியை கருவுற்றிருக்கும் போது காட்டில் விட்டதை ஏளனமாகப் பேசினர். சத்துருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனுக்குக் கோபம் ஏற்பட்டது. அவர்களை எதிர்த்தான். அனுமனுக்கு அவர்கள் யார் என்று தெரிந்துவிட்டது. அதனால் இராம குமாரர்களின் திறனைக் கண்டு போரிடாமல் ரசித்துக்கொண்டிருந்தான். அவர்கள் மீது சரமாரியாக அம்புகளைத் தொடுத்தும் இலவகுசர்களை ஒன்றும் செய்ய முடியவில்லை. இலவகுசர்கள் எய்த அம்புகள் சத்துருக்கனன் மீது படாதவாறு அனுமன் காத்து வந்தான்.

அதற்குள் இராமன் தன் சகோதரர்களுடன் அங்கு வந்தான். வால்மீகியும் சீதையும் வந்து சேர்ந்தனர். இலவகுசர்களின் பெருமையைப் பாராட்டினர். இராமன் தன் எண்ணப்படி அசுவமேத யாகத்தைச் சிறப்பாக செய்து முடித்தான். திரேதா யுகம் முடியும் தருவாயில் தன் அவதாரப் பணி முடிந்துவிட்டதை உணர்ந்த இராமன் வைகுந்தம் செல்ல விரும்பினான். அனைவரிடமும் விடை பெற்றுக் கொண்டான். அனுமனிடம் வந்து "வாயு புத்ரா! என் மீது அபாரபக்தி செலுத்தும் நீ என்னுடன் வைகுந்தம் வரலாமே!" என்றார். அதற்கு அனுமன், "ஸ்வாமி! தங்கள் திருநாமத்தை உச்சரிப்பதில் பேரானந்தம் கொள்கிறேன். நான் சேது அணையை பாதுகாத்து வருகிறேன்" என்று பணிவுடன் கூறினான். அப்போது இராமன் "துவாபர யுகத்தில் கிருஷ்ண அவதாரத்தின் போதும் உனக்கு காட்சியளிக்கிறேன்" என்றான்.

அனுமன் இராமனிடம் "அப்போது கூட தாங்கள் எனக்கு சீதாராமனாகவே காட்சியளிக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்ள இராமனும் அருள் புரிந்தார்.

## கிருஷ்ணன் இராமனாகக் காட்சி

துவாபரயுகம் ஆரம்பித்துவிட்டது. பஞ்ச பாண்டவர்களுக்கும் துரியோதனனுக்கும் பகைமை மூண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூதாட்டத்தில் தோற்கச் செய்து பஞ்ச பாண்டவர்களை வனவாசம் அனுப்பினான். வனவாசம் முடிந்து வந்த பிறகும் தான் சொன்ன வார்த்தையை மீறி அவர்களுக்கு சிறு இடமும் அளிக்க மறுத்தான். ஸ்ரீகிருஷ்ணபகவான் தூதராக வந்தும் அலட்சியப்படுத்திவிட்டான். இனி போரிடுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையாகியது.

போரில் வெற்றி தம்பக்கம் இருக்க வேண்டும் என்பதற்காக பாண்டவர்களுள் ஒருவனான அர்ச்சுனன் பரமசிவனை நோக்கித் தவமிருந்து பாசுபதாஸ்திரம் பெற்றான். வழியில் திருத்தலங்களைத் தரிசித்துக் கொண்டே சேதுக்கர பக்கம் வந்தார். அர்ச்சுனன் அங்கு தவமிருந்து வந்த அனுமனிடம், "இந்த அணையைக் கட்ட பாறைகளையும் கற்களையும் கொண்டு வந்திருக்கிறார்களே! இராமன் தான் வில்வித்தை தெரிந்தவனாயிற்றே! அம்புகளைக் கொண்டே பாலம் அமைத்திருக்கலாமே!" என்றான் ஏளனமாக.

அதைக்கேட்ட அனுமன் அம்பால் கட்டப்படும் பாலம் உறுதியாக இருக்காது" என்று கூறியதும் அர்ச்சுனன் தன்னால் உறுதியான பாலம் கட்ட முடியும் என்று அம்புகளாலேயே ஒரு பாலத்தைக் கட்டினான். இருவரும் பந்தயம் வைத்தனர். பாலம் உறுதியாக இருந்தால் அனுமன் அர்ச்சுனனுக்கு அடிமையாக வேண்டும், இல்லையென்றால் அர்ச்சுனன் அனுமனுக்கு அடிமையாக வேண்டும்.

பாலத்தின் மீது அனுமன் ஏறியதும் பாலம் நொருங்கி விழுந்தது. அர்ச்சுனன் திடுக்கிட்டான். தன்னை வில் வீரன் என்ற சொல்லிக்கொள்ளவே வெட்கப்பட்டு, கிருஷ்ண பகவானை நினைத்து, "என்மீது என்ன குற்றம் உள்ளது" என்று வேண்டினான். அங்கு கிருஷ்ண பகவான் அந்தணர் வடிவில் வந்து அர்ச்சுனனை மீண்டும் பாலம் கட்டும்படி கூறினார். இப்போது அனுமனால் அப்பாலத்தைத் தகர்க்க




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடியாமல் போகவே திகைப்புற்றான். அவன் தன் கைகளைக் கூப்பியபடி இராமனை மனதில் நினைத்தான்.

அந்தணர் உருமாறி கிருஷ்ணபரமாத்மா காட்சி தந்தார். அனுமன் அவர வணங்கினான். "வாயு மைந்தா! உங்களுடைய ஆற்றல் குறையவில்லை. உனக்கு ஒரு வேலை காத்திருக்கிறது. நடக்கப்போகும் பாரதப் போரில் நான் அர்ச்சுனனின் தேரைச் செலுத்தும் சாரதியாகப் போகிறேன். நீ அத்தேருக்கு கொடியாக இருந்து வெற்றிக்கு உதவ வேண்டும்" என்றார். அனுமன் பேரானந்தம் கொண்டான். அர்ச்சுனனும் அனுமனும் தழுவிக் கொண்டனர்.

அர்ச்சுனன் சிவபெருமானை நோக்கி தவம் செய்யச் சென்றதால் மற்ற சகோதரர்கள் பாஞ்சாலியுடன் புனித ஸ்தலங்களைத் தரிசித்து வந்தனர். அப்போது ஒரு சமயம் இமயமலைச் சாரலிலிருந்து மணம் மிகுந்த மலர் ஒன்று காற்றில் மிதந்து வந்து பாஞ்சாலியின் மடியில் விழுந்தது. அத்தகைய மலர்களை அவள் விரும்பினாள். அருகிலிருந்த பீமன் அம்மலரைக் கொண்டுவர இமயமலைச் சாரலுக்கு வந்தான். பாதையின் நடுவில் அனுமன் படுத்திருந்தான். வானரத்தைத் தாண்ட விரும்பாத பீமன் நகர்ந்து வழிவிடச் சொல்லியும் அனுமன் கேட்கவில்லை.



கடைசியில் பீமன் அனுமனின் வாலை நகர்த்த முயன்றான். எவ்வளவு சிரமப்பட்டும் முடியாது போகவே அசந்து விட்டான். அப்பொழுது அனுமன் சிரித்து தன்னை அறிமுகம் செய்ததும் பீமன், "என் அண்ணன் வாயுபுத்திரன் அனுமனா?" என்று மகிழ்ந்து கூறினான். அனுமன் அவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிவந்த சௌகந்திகா மலரைப் பெற்றுச்செல்ல வழிசொன்னான். பீமன் அனுமனிடம் "அண்ணா! தங்களின் பேருருவத்தைக் காண விரும்புகிறேன்" என்று விண்ணப்பிக்க அனுமனும் தன் பேருருவைக் காட்டினான். அதைக் கண்டு பீமனின் உடல் சிலிர்த்தது. பின் தன் உருவை சுருக்கியதும் இருவரும் விடைபெற்றனர்.

ஸ்ரீகிருஷ்ணபரமாத்மா இராம அவதாரத்தின் போது ஆஞ்சனேயனுக்கு அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற விரும்பினர். அவருக்கு மூத்தவராக இருந்த பலராமன் கிருஷ்ணனைவிட தானே வல்லவன் என்ற ஆணவம் கொண்டிருந்தான். சத்தியபாமாவோ தன்னைவிட அழகும் இலட்சணமும் பொருந்தியவள் வேறு யாருமில்லை என்று கர்வம் கொண்டிருந்தாள். இந்தச் சந்தர்ப்பத்தில் இருவரின் அகம்பாவத்தையும் அடக்க பகவான் விரும்பினார். அப்போது நாரத முனியும் அங்கு வந்திருந்தார். பரந்தாமன் நாரதரையும் பலராமனையும் "அனுமனை கிருஷ்ணன் அழைத்ததாகச் சொல்லி அழைத்துவாருங்கள்" என்று சொல்லி அனுப்பினார்.

அப்போது அனுமன் மேற்குக் கடற்கரைப் பிரதேசத்தி லிருந்த பிரபாச தீர்த்தத்துக்கு புனித யாத்திரையாக வந்திருந்தான். நாரதருடன் வந்த பலராமன், "கிருஷ்ணன் அழைப்பதாக" கூறினான். அனுமன் விழித்தான். கிருஷ்ணனை தனக்கு தெரியாது என்றதும் "பலராமனின் தம்பி பெருமையாக சொன்னதும் அனுமன் அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்து, "என் இராமனைவிட பலம் வாய்ந்தவனா?" என்று கேட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலராமன் கோபமுற்று அவன்மீது பாய்ந்தான். அனுமன், "நீ உடனே உன் பெயரை மாற்றிக்கொள். என் இராமனைவிட உயர்ந்தவன் யாருமில்லை" என்று ஆர்ப்பாட்டம் செய்ய பலராமன் அலறியடித்துக்கொண்டு கிருஷ்ணனிடம் முறையிட்டான். கிருஷ்ணன், "நீங்கள் என்னைப்பற்றி சரியாகச் சொல்லியிருக்க மாட்டீர்கள். மீண்டுமொருமுறை சென்று அழைத்து வாருங்கள்" என்று அனுப்பிவைத்தார். இப்பொழுது படையுடன் சென்றான் பலராமன். இதைக் கண்டதும் அனுமன் பலராமனையும் படையையும் நையப்புடைத்து அனுப்பினான்.

ஒரு வானரத்திற்கு இத்தனை வலிமையா என்று வியப்பும் வேதனையுமுற்ற பலராமன் கிருஷ்ணனிடம் நடந்ததைக் கூறினான். "அண்ணா! எங்கள் வலிமையால் அந்த வானரத்தை அடக்க முடியாதா?" என்று கேட்டதும் பலராமனின் மனதிலிருந்த அகம்பாவம் நீங்கியது. கிருஷ்ணன் அண்ணா! "எனக்காக இம்முறை சென்று, "இராமர் அழைத்துவரச் சொன்னார் என்று சொல்லுங்கள் என்று விடாப்பிடியாக அனுப்பிவைத்தார்.

பலராமன் நடுங்கியபடி அனுமனை நெருங்கினான். அனுமன் ஆத்திரத்துடன் பார்த்தான். உடனே அவன், "இராமர் அழைத்துவரச் சொன்னார்" என்று கூறியதும் அனுமன் குளிர்ச்சியடைந்தான். "இதை முன்பே சொல்லியிருக்கக் கூடாதா" என்று அருகில் வந்து பலராமனை அன்புடன் கட்டித் தழுவினான். தான் துன்புறுத்தியதற்காக மன்னிப்பு கேட்டுவிட்டு இராமரைக் காண பலராமனுடன் புறப்பட்டான். பலராமனுக்கே இது வியப்பாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரண்மனை வந்ததும் கிருஷ்ணனுக்கு செய்தி தெரிவிக்கப்பட்டது. உடனே கிருஷ்ணன், "நான் இராமாவதாரக் காட்சியினை அனுமனுக்குத் தரப்போகிறேன்? சத்தியபாமையை சீதையாக வரச்சொல்லுங்கள்" என்று நாரதரிடம் சொல்லி அனுப்ப, அவள் ஆடை அலங்காரத்துடன் வந்தாள். அதைக் கண்டதும், "நாள் சொன்னதை கவனிக்கவில்லையா? சீதை இப்படியா இருந்தாள்" என்று கேட்டதும் சத்தியபாமா அசோகவன சீதையாக எண்ணி தன் ஆபரணங்களையெல்லாம் கழற்றிவிட்டு சாதாரண புடவையுடன் தலைவிரி கோலமாய் காட்சி தந்தாள்.

அதைக் கண்ட பரந்தாமன் தன் கண்களை மூடிக்கொண்டு "இதென்ன கோரக் காட்சி! இதைக் கண்டால் அனுமன் உன்னை சீதையாக மதிக்கமாட்டான். அவனை நீண்ட நேரம் காக்க வைத்துவிட்டேன்" என்று நாரதரிடம் ருக்மணியிடம் சென்று "சீதையாக வரும்படி கூறுங்கள்" என்று அனுப்பினார். ருக்மணி அதைக் கேட்டு மகிழ்ந்து அலங்காரம் எதுவும் செய்துகொள்ளாமல் இருந்தபடியே நெற்றியில் திலகத்துடன் விரைந்து வந்து "ஸ்வாமி! நம் பக்தன் எங்கே?" என்றாள். சத்தியபாமாவின் கர்வம் நீங்கியது. கிருஷ்ணன் மகிழ்ச்சியுடன் அனுமனை வரவழைத்து இராமாவதாத்தில் தான் இருந்த கோலத்தில் காட்சியளித்தார்.

அனுமன் அக்காட்சியைக் கண்டு ஆனந்தக் கண்ணீர் பெருகினான். "பிரபோ! தங்களை எத்தனை முறை கண்டாலும் ஆவல் தீரவில்லை! எங்களை எப்பொழுதும் பார்த்துக்கொண்டே இருக்கவேண்டுமென்று விரும்புகிறேன். எனக்கு அருள்புரியுங்கள்" என்று வேண்டினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிருஷ்ணபகவான் புன்னகை புரிந்தார். "ஆஞ்சனேயா! உன் விருப்பம் நிறைவேறும் நீ விரும்பும் போதெல்லாம் உனக்கு இவ்வாறே காட்சி தருகிறேன்" என்று திருவாய் மலர்ந்தார்.

ஆஞ்சநேயர் மெய்மறந்து "ஸ்ரீராமா ஸ்ரீராமா" என்று இராமநாமத்தை உச்சரித்து ஆனந்தக் கூத்தாடினான். பின் அங்கிருந்து விடைபெற்று சேதுக்கரையிலேயே இருந்து இராமனை நினைத்து தவமிருந்தான்.

ஸ்ரீராமனை நினைத்து எங்கெல்லாம் வழிபாடு நடக்கிறதோ அங்கெல்லாம் ஸ்ரீ ஆங்சநேயர் வந்து கேட்டு மகிழ்வார். அவர் என்றும் இராமபக்தனாய் சிரஞ்சீவியாய் வாழ்ந்து வருகிறார்.

ஸ்ரீராமஜெயம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஞ்சநேயர் சந்நிதி இருக்கும்
## அனுமான் வந்த குடி

ஸ்ரீ ஆஞ்சநேயருக்குத் துளசி மாலையும், வெற்றிலைச் சுருள் மாலையும், வடை மாலையும், ஸ்ரீ ராமஜெயம் என்று எழுதிக் கட்டிய மாலையும் மிகவும் ஏற்றவை. எலுமிச்சை மாலை ஆஞ்சநேயரை குளிர்விக்கும். வெண்ணெய் சாற்றுவோர்களது குறைகள் வெண்ணெய் உருகுவது போல உருகிவிடும். ஆஞ்சநேயருக்கு சந்தன அபிஷேகம், அன்னாபிஷேகம் மிகவும் விசேஷம். குங்கும அர்ச்சனை பாதத்துக்குச் செய்யப்படுகிறது. சர்க்கரைப் பொங்கல், புளியோதரை, தயிர் சாதம், சுண்டல் போன்றவை நைவேத்தியம் செய்வதற்கு உகந்தவை.

ஸ்ரீ ஆஞ்சநேயர் வாலில் நவக்கிரகங்கள் இருப்பதாக ஐதீகம். ஆஞ்சநேயருக்கு வாலில்தான் சக்தி அடங்கியிருக்கிறது. அதனால் வாலுக்கு சந்தன, குங்கும பொட்டு வைப்பது வழக்கம்.

ஆஞ்சநேயரை வீட்டில் பூஜை செய்பவர்கள் தனியாக ஒரு பூஜை அறையைச் சுத்தமாக வைத்துக்கொள்ள வேண்டும். பூஜை அறையைத் துடைப்பம் கொண்டு சுத்தம் செய்யக் கூடாது.

ஸ்ரீ ஆஞ்சநேயரைப் பக்தி சிரத்தையுடன் தொடர்ந்து வழிபடுவோர்க்கு வேண்டுவன கிட்டும். அறிவு விருத்தியாகும். வலிமை பெருகும். மன உறுதி ஏற்படும். பயம் அகன்று, நோய் நொடிகள் விலகும். தெளிவு பிறக்கும். நாவன்மை சிறக்கும்.

ஆஞ்சநேயர் அஷ்டோத்தர சத நாமாவளி, ஆஞ்சநேயர் கவசம், ஆஞ்சநேயர் ஸ்தோத்திரம், ஹனுமான் சாலீஸா ஆகியவற்றைக் கூறி, துளசி கொண்டு அர்ச்சனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்லாம். அவரவர் வசதிக்கேற்ப பழங்கள், பிரசாதங்களைப் படைத்து ஆஞ்சநேயரைத் துதிக்கலாம்.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள "அனுமான் வந்த குடி" மிகவும் பழைமை மிக்கது. இங்கு வீர ஆஞ்சநேயராக எழுந்தருளி அருள் பாலித்து வருகிறார். ஸ்ரீ ராமர் தல தர்ப்பணம் செய்வதற்காக, அனுமார் தர்ப்பை பறிக்க "ஆண்டார் பந்தி" என்ற ஊருக்குச் செல்லும் வழியில் இந்த ஊரில் தங்கினதாகவும், அதனால் "அனுமான் வந்த குடி" என்ற பெயர் இவ்வூருக்கு ஏற்பட்டதாகவும் தல வரலாறு உள்ளது.

அனுமனுக்கு மிகவும் பிரீத்தியானது வடை. எனவே ஆஞ்சநேயருக்கு 108, 1008 என்ற எண்ணிக்கயில் வடைகளைக் கட்டி ஆஞ்சநேயருக்கு மாலையாக அணிவித்தால் ராகு - கேதுவினால் ஏற்படும் தோஷத்தில் இருந்து விடுதலை கிடைக்கும். வெளிநாட்டு தொடர்பில் லாபம் கிடைக்கும். மஹாலட்சுமி அருகில் இருந்து உங்களைக் காப்பாள். சனி கிரகதோஷம், சூரிய, செவ்வாய் கிரக தோஷம் நீங்கும். ஆஞ்சநேய மந்திரத்தை கல்வி கற்கும் மாணவர்கள் ஓதிவர கல்விச் சிறப்பு உண்டாகும்.

ஆஞ்சநேயரை வணங்கி சகல காரியங்களிலும் வெற்றிபெற இந்த மந்திரத்தைச் சொல்லலாம்.

**ஸ்ரீராம தூத மஹாதீர ருத்ர வீர்ய ஸ முத்பவ!**

**அஞ்ஜநா கர்பஸம் பூத வாயு புத்ர நமோஸ்துதே.**

காரியங்களில் சித்தி உண்டாக,


**அஸாத்ய ஸாதக ஸ்வாமிந்! அஸாத்யம் தவகிம் வத!!**

**ராமதூத க்ருபா ஸிநதோ மத்கார்யம் ஸாதயப் ப்ரபோ!**

எனும் மந்திரத்தைச் சொல்லலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பஞ்சமுக ஆஞ்சநேயர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெய்வீக மலர்



சித்தன்கேணி என்கின்ற திவ்வியமான இப்பதியிலே அருள்பாலித்து வருகின்ற ஸ்ரீ நாககன்னி அம்பாள் ஆலயத்தில் பிரத்தியேகமாக பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆஞ்சநேயப் பெருமானுக்கு வெள்ளி, செவ்வாய் மற்றும் ஞாயிறு தினங்களில் விசேட பூசைகள் நடாத்தப்பட்டு வருகின்றது.

இவ்வண்ணம் ஸ்ரீ ஆஞ்சநேயப் பெருமானுடைய திருவருளாலே அடியார்கள் பலரும் அனுக்கிரகம் பெற்று வருவதோடு எம் பெருமானுடைய கீர்த்தியை அறிந்து மென்மேலும் பல அடியவர்கள் இந்த ஆலயத்தை நாடித், தேடி வந்து ஆஞ்சநேயருடைய அருளாட்சிக்கு பாத்திரமாகி வருகின்றனர். இத்தெய்வீக கைங்கரியத்தோடு சஞ்சீவியான அனுமாராம் ஸ்ரீ ஆஞ்சநேயப் பெருமானது மகிமைகளையும், பெருமைகளையும் சக்தி. கீர்த்திகளையும் உள்ளடக்கியதான "ஸ்ரீ ராம அனுமன் புராணம்" என்கின்ற பெயரில் உருவாக்கப்பட்ட மலர் ஒன்றை அம்பிகையின் தைத்திருநாள் தீமிதிப்பு வைபவத்தன்று வெளியீடு செய்து வைப்பதில் அடியார்களாகிய நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

இம்மலருக்குரிய எழுத்தாக்கத்திற்கான பற்பல ஆதாரங்களை பல நூல்களிலிருந்து தேடியும், தொகுத்தும், நூலுருவாக்கிய அரும்பணிக்குரியவரும் அம்பாளின் திருவருளுக்கு பாத்திரமானவரும், ஓய்வுபெற்ற அதிபருமாகிய திரு.கனகசபாபதி இரத்தினேஸ்வரன் ஆவார்.

இம்மலருக்கான அனுசரணையை கொழும்பைச் சேர்ந்த திருவாளர் சிவசிதம்பரம் இராமச்சந்திரன் (Express Cargo Services, No.41, George R.D.Silva Mawatha, Colombo-13. Tell.:0112437246, 0773910667) அவர்கள் செய்துள்ளார்கள். அவருக்கு அம்பாளின் திருவருளும் ஆஞ்சநேயப் பெருமானின் திருவருளும் கிடைக்க வேண்டுவதோடு, போற்றுதற்குரிய பல முயற்சிகளினூடாக ஒரு தெய்வீக கைங்கரிமாக உருவாகியுள்ள இம்மலரினை பெருமகிழ்வோடு வெளியீடு செய்கின்றோம்.

–சுபம்–

**ஆலய சித்தஞான குரு இந்திரன் ஐயாவும்**
**அவர்தம் பணியோடு ஆலயத் தொண்டர்களும்**

**14.01.2014**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org